# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்:112** **நாள் : 17.03.2015**

**மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா** அவர்களின் வழிகாட்டுதலின்படி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் **திரு. ந. சுப்ரமணியன்** அவர்கள் தலைமையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் 2014–15ம் ஆண்டு திட்டப்பணிகள் குறித்து, தொடர்புடைய துறை (Line departments) தலைவர்களுடன் 17.03.2015 இன்று தலைமைச்செயலகத்தில் இரண்டாவது ஆய்வுக்கூட்டம் நடைப்பெற்றது. இவ்வாய்வு கூட்டத்திற்கு முனைவர் **கண்ணகி பாக்கியநாதன்,** இ.ஆ.ப., முதன்மைச்செயலர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்கள் வரவேற்புரை வழங்கினார். பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்புடைய துறைத்தலைவர்களுடன் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத்திட்ட முன்னேற்ற அறிக்கையினை ஆய்வு செய்தார். அதன் விவரம் பின்வருமாறு

18 செயலாக்கத்துறைகளை (Secretariat Departments) உள்ளடக்கிய 34 துறைகளுக்கு ( Head of Departments) இந்நிதியாண்டில் (2014-15) ஆண்டில் ஆதி திராவிடர் துணைத்திட்டத்தின் கீழ் ரூ.10001.07 கோடியும் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் ரூ572.93 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்விரு துணைத்திட்டங்களின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 28.02.2015 வரை ஒவ்வொரு துறையிலும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் மற்றும் பயனாளிகளின் விவரங்கள் குறித்து துறைவாரியாக விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், ஆய்வு கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு துறையிலும் 2014-15-ம் ஆண்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் அனைத்தும் உரிய பயனாளிகளுக்கு சென்றடைவது குறித்தும் மற்றும் இலக்கினை அடையாத துறைகள் இலக்கினை அடைய துரித நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் எடுக்குமாறு துறை தலைவர்களை கேட்டுக்கொண்டார்.

இவ்வாய்வு கூட்டத்தில், முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர், இந்திய மருத்துவம் மற்றும் ஹோமியோபதி, **திரு மோகன் பியாரே,** இ.ஆ.ப.., மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் **திரு எஸ். விஜயராஜ் குமார்,** இ.ஆ.ப., மற்றும் 27 துறையை சார்ந்த துறைத்தலைவர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**முதன்மைச் செயலாளர்,**
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்
நலத்துறை

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**